## “த.வெ.க. அமைச்சர் மீது போதைப்பொருள் சர்ச்சை!”

# “வீடியோ வெளியான பின்னரும் ஏன் மவுனம்?” - அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி திருவள்ளூரில் மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு – போலீசார் கைது நடவடிக்கையால் பரபரப்பு!

திருவள்ளூர், ஜூன் 30:

த.வெ.க. அமைச்சர் சரத்குமார் போதைப்பொருள் பயன்படுத்தியது போல் வெளியாகிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அந்த விவகாரத்தில் உடனடியாக முழுமையான விசாரணை நடத்தி, உண்மை வெளிவரும் வரை அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி, தலைமை கழக அறிவிப் பின்படி திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த கழக மாணவர் அணி சார்பில் நேற்று திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தலைமையிலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையிலும், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் முரளி சேனா, வி.தியாகராஜன் வெற்றி (எ) ராஜேஷ் ஆகியோர் வரவேற்பிலும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் கா. அமுதரசன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு, “த.வெ.க. அரசே பதில் சொல்”, “போதைப்பொருள் சர்ச்சைக்கு உண்மையை வெளிக்கொண்டு வா”, “அமைச்சரை உடனே பதவி நீக்கு”, “சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்று முழக்கமிட்டு கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிர்வாகிகள், “பொதுமக்கள் மீது போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டு எழுந்தாலே உடனடியாக கைது, விசாரணை, நடவடிக்கை என அரசு விரைந்து செயல்படுகிறது. ஆனால் த.வெ.க. அமைச்சர் மீது போதைப் பொருள் பயன்படுத்தியதாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக வீடியோ வெளியாகியும், அரசு மவுனம் காப்பது ஏன்? இது யாரைக் காப்பாற்றும் முயற்சி?” என்று கேள்வி எழுப்பினர்.

மேலும் அவர்கள், “பொதுப் பொறுப்பில் இருப்பவர்கள் மீது இத்தகைய சர்ச்சைகள் எழும் போது, அவர்கள் தங்களது பதவியில் தொடர்வது ஜனநாயக மரபுக்கும் அரசியல் நாகரிகத்துக்கும் உகந்ததல்ல. அந்தவீடியோ தொடர்பாக சுயாதீனமான விசாரணை நடத்தி, உண்மை வெளிவரும் வரை த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவியில் இருந்து விலக்க வேண்டும். அதுவே அரசின் நேர்மையையும் வெளிப்படைத்தன்மையையும் நிரூபிக்கும்” என்று வலியுறுத்தினர்.

தவறு எவர் செய்தாலும் நடவடிக்கை என்ற கொள்கை உண்மையில் நடைமுறையில் உள்ளதா? அல்லது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் தனி சலுகையா? சாதாரண மக்களுக்கு ஒரு நீதி, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு வேறு ஒரு நீதியா?” என்ற கேள்விகளையும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்ற நிலையில், காவல்துறையினர் நூற்றுக்கும் மேற்பட்டோரை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். கைது செய்யப்பட்ட போது காவல்துறை வாகனத்தில் ஏறிய நிர்வாகி ஒருவர் தனது ஏ.டி.எம். கார்டு மற்றும் மாத்திரையை கையில் காட்டி ஆதங்கத்தை வெளிப்படுத்திய சம்பவம் அங்கிருந்தோரிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், நகரச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், மாவட்ட அவைத் தலைவர்கள் கே. திராவிட பகதன், மு.பகலவன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ஓ.ஏ. நாகலிங்கம், ப.சிட்டிபாபு, ஒன்றியச் செயலாளர்கள் தி.வை.ரவி, ஆர். ஜெயசீலன், கே. அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், டி.மோதிலால், பிரகாஷ்ஒலி, பெ.பழனி, பா.சம்பத், கே.ராஜேந்திரன், ஏ.எல். விஜயகுமார்,ஜான் பொன்னுசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ம.கிரண், கே. சுரேஷ்குமார், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், ஜெ.மோகன் பாபு, ஜி.சி. சி.கருணாநிதி, வி.ஜெ. உமா மகேஸ்வரன், டி.பிரியாகுமார், ஆர்.திலீபன், டி.ஜெ.ஜி.மனோஜ் (எ)தமிழரசன், எம்.எம். லிங்கேஷ்குமார், கோபிநாத், எழில், சதீஷ் பாஸ்கர், விக்டர் மோகன், புருஷோத்தமன், ஜி.சத்தியா, விக்னேஷ் உதயா, மனோஜ்குமார், தி.ஆ.கமலக்கண்ணன், என்.பரசுராமன், டி.எம்.ரவி, கைலாசம், இ.குப்பன் , டி.சிவாக்குமார், சரஸ்வதி சந்திரசேகர், சி.சு.விஜயகுமார், பி.கே.நாகராஜ், சித்திக்அலி, மதியழகன், மதுசூதனன், நந்தகுமார், ராஜேந்திரகுமார், மாலதி, நிலாவதி ராஜேந்திரன் சி. அண்ணாகுமார், நகர மாணவர் அணி அமைப்பாளர் ப.டில்லிபாபு, அஜீத், பிரசாத், முகிலின், விக்ரம், கார்த்திக், விக்னேஷ், வினோத், ஞானபிரகாஷ், யோகேஷ், புகழேந்தி, பிரகாஷ், கோகுல் கிருஷ்ணன், ராஜேஷ், முரளி, எம்.பன்னீர்செல்வம், வேலாயுதம், கோடீஸ்வரன், கிளிவளவன், டி.செல்வக்குமார், செல்லதுரை, டொனால்டு, விஜயகுமார், மோகன், அயூப்அலி, வி.இ.ஜான், ஜீ.ஆர்.ராஜ்குமார்தாமஸ், தனலட்சுமி, ஆ.பவளவண்ணன், பி.ஆர்.பிரபாகரன், என்.பாலகிருஷ்ணன், வி.எஸ்.சதீஷ், ராஜி, பாலசந்தர், வீனஸ், ஜி.பாண்டியன், சபரிஸ், பாபு, ராஜ்பால், ஹரிகரன், சபரிஷ், பாலாஜி, கு.பிரபாகரன், வீ.மகேஷ்குமார், கே.பி.எஸ்.கார்த்திக், க.பரிமலேகழன், டி.சஞ்சய் , தியாகு சாந்த், ஜி.டி.எம்.கார்த்திக், கி.விக்னேஷ், வி.சுரேந்தர், வி. லிங்கேஷ்கு மார், எம். ராஜதுரை, ராகவேல், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும், மாணவர் அணி மற்றும் கழகத் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



பொது இடத்தில்போதைப்பொருள் பயன்படுத்தியது வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்திதலைமை கழக அறிவிப்பின்படிதிருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில்மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் முரளி சேனா, வி.தியாகராஜன், வெற்றி(எ)ராஜேஷ் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இதில் கழக மாணவரணி துணைச் செயலாளர் க.அமுதரசன் கண்டன உரையாற்றினார். இதில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். அப்போது நிர்வாகி ஒருவர்தனதுஏ.டி.எம்.கார்டுமற்றும்மாத்திரையைகையில்காட்டி ஆதங்கத்தைதெரிவித்தனர் இதில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாணவரணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் பாரா பேட்மிண்டன் இன்டர்நேஷனல் போட்டிகளில் பங்கேற்று தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு பெருமையை சேர்த்துள்ள,இந்தியாவின் முதல் பாரா பேட்மிண்டன் வீராங்கனை, துளசிமதி முருகேசன் மூன்று தங்கம்,ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கல பதக்கங்களை வென்று அபார சாதனை படைத்துள்ளார். அவருக்கு, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினார்.

### ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல்!

# திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் - த.வெ.க. ஆட்சிக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, ஜூன் 30**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், “தமிழ்நாட்டில் திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் த.வெ.க. ஆட்சிக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

மற்றொரு நாள். மற்றுமொரு ராஜினாமா.

இந்த Sofa Model ஆட்சி அமைந்த பிறகு, அ.தி.மு.க.வின் எம்.ஆர்.விஜயபாஸ்கர் 6ஆவது எம்.எல்.ஏ.வாக இன்று பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல் எந்த அளவுக்கு extreme ஆகியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

ஆட்சி அமைக்க ஆதரவு அளித்த கட்சிகளின் மீது நம்பிக்கையின்றி, நிறுத்தாமல் MLAக்கள் purchaseஐ தொடருவது, மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம்.

“தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்” என்று scriptபடி பொங்கிய முதலமைச்சர், அடுத்த sceneல், சொத்துக்குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்?

#SofaModel அரசின் இந்த Washing Machine அரசியலை தமிழ்நாடு பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.

திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மாணவர் அணி சார்பில் போராட்டம்!

# திருப்பத்தூர் மாவட்டத்தில் 1000 பேர் கைது!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் தலைமை!

திருப்பத்தூர், ஜூன் 30 -

போதைப் பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை கண்டித்து, திருப்பத்தூரில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் தலைமையில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் முன்னிலையில் மாவட்ட மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகிலிருந்து கண்டன முழக்கங்களை எழுப்பியவாறே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த காவல் துறையினர் சாலை மறியல் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி இல்லை; எனவே கலைந்து செல்லுமாறு கழகத்தினரிடம் தெரிவித்தனர்.

ஆனால் கழகத் தோழர்கள் கலைந்து செல்ல மறுத்தனர். இதையடுத்து அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், நகர, ஒன்றிய, பேரூர் கழக செய லாளர்கள் எஸ்.ராஜேந்திரன், என்.கே.ஆர்.சூரிய குமார், ம.அன்பழகன், ஷபீர்அகமத், கயாஸ்அஹமது, க.உமாகன்ரங்கம், கே.ஆர். திருப்பதி, எஸ்.தாமோதிரன், கே.ஏ.குணசேகரன், கே.முருகேசன், டி.அசோக்குமார், க.இராமமூர்த்தி, த.முரளி, அ.மோகன்ராஜ், வி.ஜி.அன்பு, ஏ.சி.சுரேஷ்குமார், எம்.ராஜேந்திரன், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, எஸ். உமாசந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன் மற்றும் கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

# வேலூரில் மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டம்!

### முகமது சகி – பி.எம்.தேவராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கைது!

வேலலூர், ஜூன் 30 –

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணியினரை போதைப் பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரைக் கண்டித்து அண்ணா கலையரங்கம் அருகில் ஆரப்பாட்டம் நடைபெற்றது.

பி.எம்.தேவராஜ் (மாவட்ட, மாணவர் அணி அமைப்பாளர் தலைமையில்)

மாநகர் மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.அருண், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் டி.சுந்தர், ஆர்.பிரபாகரன், எம்.ஹரிநாத், ஏ.அரவிந், சுகுமார், சுரேஷ், முத்துக்குமரன், பிரதீப், ஆர்.நவீன் பங்கேற்றனர்.

மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் பிரபாத் குமார், மாவட்டப் பொருளாளர் எஸ்.தாமோதரன், வி.அமலு, மாநகர் துணைச் செயலாளர் முன்னா செஷரீப், ஒன்றிய செயலாளர்கள் கள்ளூர் ரவி, கஜேந்திரன்,

பகுதிக் கழக செயலாளர்கள் முருகப் பெருமாள், சசிகுமார், தயாளராஜ், முனவர் பாஷா, இளைஞர் அணி ப.ரவிகுமார், இர்பான், தினேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் கைதான அனைவரும் திருமண மண்டபம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டனர்.

அம்மண்டபத்தில் மின்சாரம் இல்லாத நிலையில் ஜெனரேட்டர் பயன்படுத்தவும் அனுமதி மறுக்கப்பட்டது.

கடும் வெயிலில் மின்சாரம் அணைக்கப்பட்ட நிலையில் கைதான கழகத் தோழர்கள் வெகு நேரம் இருக்க நேரிட்டது.

### கச்சா எண்ணெய் விலை குறைந்த நிலையில்

# பெட்ரோல், டீசல் விலையை உடனே குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### கொ.ம.தே.க. ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தல்!

நாமக்கல், ஜூன். 30-

கச்சா எண்ணெய் விலை குறைந்த நிலையில் பெட்ரோல், டீசல் விலையை உடனே குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு ஆசியாவில் போர் சூழ்நிலை காரணமாக கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 138 அமெரிக்க டாலராக இருந்தது. அப்போது தலைநகர் டெல்லியில் பெட்ரோல் லிட்டருக்கு 94.77 ரூபாயாகவும், டீசல் லிட்டருக்கு 87.67 ரூபாயாகவும் இருந்தது. இப்போது கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 70.71 அமெரிக்க டாலராக குறைந்துள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலையில் இன்று தலைநகர் டெல்லியில் பெட்ரோல் லிட்டருக்கு 102.12 ரூபாய்க்கும், டீசல் லிட்டருக்கு 95 20 ரூபாய்க்கும் விற்கிறது. இது மட்டுமின்றி பெட்ரோல், டீசல் விலை உயர்ந்த போது வணிக பயன்பாட்டிற்கான எல்பிஜி சிலிண்டர் விலை இரண்டரை மடங்குக்கு மேல் உயர்ந்தது.

இப்போது நிலைமை சீரான நிலையில் விலை குறைப்பு பற்றி எவ்வித அறிவிப்பும் இல்லாதது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது. எனவே மத்திய அரசு உடனடியாக தலையிட்டு பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதுடன் எல்பிஜி வணிகப் பயன்பாடு மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் சிலிண்டர் விலையையும் உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.



குன்றத்தூர் மத்திய ஒன்றியம் திருமுடிவாக்கம் ஊராட்சி கிளை கழக செயலாளர் எம்.ரகுபதி கல்யாணி ஆகியோரின் மகன் இல்லத் திருமண விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் – குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை, ஆ. மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக செயலாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாதரம், மாங்காடு நகர கழக செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, பம்மல் பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், கருணாகரன், ஏழுமலை, ஒன்றிய குழு உறுப்பினர் லட்சாவதி, கருணாகரன், குன்றத்தூர் தெற்கு மற்றும் மத்திய ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.